بسم الله الرحمن الرحيم

# மரணித்தவர்களுக்காக குர்ஆன் (கத்தம்) ஓதலாமா?

மரணித்தவர்களுக்காக குர்ஆன் ஓதி, அதை அவர்களுக்கு ஹதிய்யா (அன்பளிப்பு)ச் செய்யும் வழமை சில முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வருகின்றது. இதற்கு ‘கத்தம்’ எனக் கூறப்படுகின்றது. இச்சொல்(ختم القرآن கத்முல் குர்ஆன்) என்ற அரபுச் சொல்லிலிருந்து திரிவுபடுத்தப்பட்டதாகும். மூன்றாம் கத்தம், ஏழாம் கத்தம், நாற்பதாம் கத்தம், வருடக் கத்தம் என்ற பெயர்களில் பல கத்தங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இச்சடங்கினால், சிலர் இறந்தவர்களுக்கு நன்மை சென்றடைவதாகவும் நம்புகிறார்கள். ஆனால், அல்குர்ஆன், அல் ஹதீஸ், மற்றும் ஸஹாபாக்களின் முன்மாதிரி ஆகியவற்றை நாம் நன்கு ஆராயும் போது இவை யாவும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வழி கெட்ட பித்அத் ஆகும் என்பத தெளிவாகின்றது. இதற்குரிய ஆதாரங்கள் பின்வருமாறு:

1. மரணித்தவர்களுக்கு கத்தம் ஓதவதால் அவர்கள் பயன் பெறுவார்கள் என்றோ, கப்ரின் வேதனை இலேசாக்கப்படும் என்றோ அல்குர்ஆனில் ஓரிடத்திலாவது கூறப்படவில்லை.

2. நபி (ஸல்) அவர்கள் மரணித்தவர்களுக்கு குர்ஆன் ஓதுமாறு கூறவுமில்லை, அன்னாரவர்கள் மறண வீடுகளுக்குச் சென்று ஒதவுமில்லை, யாரும் அன்னாரிடம் சென்று ஓதுமாறு வேண்டிக் கொள்ளவுமில்லை.

3. எமக்கு முன்மாதிரியாக விளங்கும் முன்னோர்களாகிய ஸஹாபாக்களில் யாரும் மரணித்தவர்களுக்கு குர்ஆன் ஓதியதாக வரலாறு கிடையாது. அவர்கள் எம்மை விட நல்லமல்களில் ஆவல் மிக்கவர்கள். அவ்வாறு ஓதுவது நன்மையான செயலாக இருந்தால் அதை செய்திருப்பார்கள்.

4. “உங்களில் இறந்தோருக்கு யாஸீன் ஸூரத்தை ஓதுங்கள்’ என்ற ஹதீஸ் பலயீனமான (ஊர்ஜிதமற்ற)தாகும். இந்த ஹதீஸ் பலயீனம் என்பதை ஷா∴பி மத்ஹபைச் சேர்ந்த இமாம் நவவி (ரஹ்) அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

روى أبوداوود (٣١٢١) وابن ماجه (١٤٤٨) من طريق أبي عثمان وليس بالنهدي عن أبيه عن معقل بن يسار –رضي الله عنه– قال: قال النبي صلى الله عليه وسلم: اقْرَءُوا يس عَلَى مَوْتَاكُمْ، وفي سنده أبو عثمان وأبوه وهما مجهولان فقد قال علي بن المديني: وهو إسناد مجهول، وقال الدارقطني: هذا حديث ضعيف الإسناد مجهول المتن ولا يصح في الباب حديث (تهذيب الكمال للمزي ٧٥/٣٤ والتلخيص الكبير ٦٥٠/٢) وقال النووي في المجموع شرح المهذب ١١١/٥ والأذكار مع شرحه الفتوحات الربانية ١١٩/٤: رواه أبو داود وابن ماجه بإسناد فيه مجهولان.

5. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் நாங்கள் ஓதும் குர்ஆனின் நன்மை, மரணித்தவர்களை சென்று அடையாது எனக் கூறியுள்ளார்கள். அவர்களின் மூலவாக்கியம் பின்வருமாறு:

**قال الإمام الشافعي في الأم ١٥٦/٤: يلحق الميت من فعل غيره وعمله ثلاث: حج يؤدّى عنه، مال يتصدق به عنه أو يقضى، ودعاء، فأما ما سوى ذلك من صلاة أو صيام فهو لفاعله دون الميت، فلم يذكر الشافعي قراءة القرآن فيما يلحق الميت من فعل غيره، وعدم وصول الصيام إلى الميت هو القول الجديد للإمام الشافعي، أما على القديم فيلحقه وبه أفتى المحققون من الشافعية للأحاديث الصحيحة فيه ( انظر في المجموع شرح المهذب ١٤١/١)**

ஷாபிஈ மத்ஹபைப் பின்பற்றுகின்றோம் எனக் கூறிக் கொள்ளும் ‘கத்தம்’ ஆதரவாளர்கள், இவ்விஷயத்தில் ஷாபிஈ இமாம் அவர்களை புறக்கணித்துவிட்டார்கள்.

6. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கருத்தையே, மத்ஹபின் பத்வாவுக்குரிய இமாமாக கருதப்படும இமாம் நவவி (ரஹ்) அவர்களும் வலியுறுத்தியுள்ளார்கள். அவர்களின் மூலவாக்கியம் பின்வருமாறு:

**قال النووي في الروضة / أما غير الصوم– كالصلاة عنه قضاء أو غيره وقراءة القرآن– فلا ينفعه، وقال في شرح صحيح مسلم ٤٨/١: وأما قراءة القرآن فالمشهور من مذهب الشافعي أنه لا يصل ثوابها إلى الميت، وقال بعض أصحابه: يصل ثوابها إلى الميت، وذهب جماعات من العلماء إلى أنه يصل إلى الميت ثواب جميع العبادات، وكل هذه المذاهب ضعيفة، ودليلهم القياس على الدعاء والصدقة والحج فإنها تصل بالإجماع، ودليل الشافعي وموافقيه قول الله تعالى: وأن ليس للإنسان إلا ما سعى، وقول النبي صلى الله عليه وسلم: إذا مات ابن آدم انقطع عمله إلا من ثلاث: صدقة جارية أو علم ينتفع به أو ولد صالح يدعو له.**

**7. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கருத்து, தங்களது மனோஇச்சைக்கு சாதகமானதாக இல்லை என்பதை உணர்ந்த பின்தோன்றிய சில மத்ஹபுவாதிகள், அவரின் கூற்றுக்கு வலிந்துரை வழங்க முயற்சித்தார்கள்.** அதாவது, மையத்திற்கு முன்னால் வைத்து ஓதாமல் விட்டாலும், அல்லது எங்கேயாவது ஓரிடத்தில் ஓதிவிட்டு பின்பு துஆக் கேட்காமல் விட்டாலுமே சேராது என்பதை ஷாபிஈ (ரஹ்) அவர்கள் நாடுகிறார்கள் என வலிந்துரை வழங்குகிறார்கள். (**انظر في تحفة المحتاج لابن حجر الهيتمي ٧٤/٧**)

**8. ஒரு மனிதன் பிறருக்காகச் செய்யும் நல்லமல்களின் கூலி, அவர்களுக்குச் சென்றடையாது.** இதை பின்வரும் குர்ஆன் வசனம் உறுதிப்படுத்துகின்றது:

'மனிதனுக்கு அவன் முயற்சித்தது தவிர வேறு இல்லை' (அந்நஜ்ம்:39) **وَأَن لَّيْسَ لِلْإِنسَانِ إِلَّا مَا سَعَى**

**(النجم:٣٩)**இத்திருவசனத்திலிருந்து, 10 இலக்கத்தின் கீழ் கூறப்பட்டவவைகளுக்கு விதிவிலக்குண்டு.

**9. கத்தம் ஆதரவாளர்கள், கியாஸ் என்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு கத்தம் ஓதுவது ஆகும் என வாதிடுகின்றனர்.** அதாவது: மேற்கூறப்பட்ட விஷயங்கள் மூலம் மரணித்தவர்கள் நன்மை அடைகிறார்கள் என்பதை மையமாக வைத்து மரணித்தவர்களுக்கும் குர்ஆன் ஓதினால் சென்றடையும் எனக் கூறுகின்றனர். இது தவறான வாதமாகும். ஏனெனில், வணக்கங்கள் எப்போதும் குர்ஆன் ஹதீஸ் ஆகியவற்றின் நேரடி மூலவாக்கியம் மூலமே பெறப்பட வேண்டும். அனுமானம் சுயநிர்ணயம் ஆகியவைகள் மூலம் பெற முடியாது. இதை பின்வரும் குர்ஆன் வசனம் நிரூபிக்கிறது.

**أَمْ لَهُمْ شُرَكَاء شَرَعُوا لَهُم مِّنَ الدِّينِ مَا لَمْ يَأْذَن بِهِ اللَّهُ (الشورى: ٢١)**

"அவர்களுக்கு, அள்ளாஹ் அனுமதிக்காத விஷயங்களை மார்க்கத்தில் சட்டவாக்கம் செய்யும் இணையாளர்கள் உண்டா?"" என மறுத்து இறைவன் கூறுகிறான்: (அஷ்ஷூரா: 21)

**10. ஒரு மனிதன் உயிருடன் வாழ்ந்த காலத்தில் செய்த சில அமல்களின் நன்மைகள், அவனது மரணணத்துக்குப் பின்பும் அவனைச் சென்றனடைகின்றன.** அவை பின்வரும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளன:

**روى مسلم (٤١٩٩) عن أبي هريرة رضي الله عنه أن رسول الله صلى الله عليه وسلم قال إِذَا مَاتَ الْإِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ إِلَّا مِنْ ثَلَاثَةٍ إِلَّا مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ**

'நிலையான தா்மம் (வக்புச் சொத்து) பயன்தரக்கூடிய கல்வி, தனக்காகப் பிரார்த்திற்கும் வாரிசு ஆகிய இவை மூன்றைத் தவிர மற்ற அனைத்துச் செயல்களும் மனிதன் இறந்துவிட்டால் அவனை விட்டும் நின்றுவிடுகின்றன' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுறைறா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம்:4199)

**11 'கத்தம்' ஓதுகின்ற பித்அத்தினால், சமூகத்தில் பலவிபரீதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.** அவைகளில் சில பின்வருமாறு:

அ) **இஸ்லாத்தில் ஏழை, செல்வந்தன் என்ற பாகுபாடு கிடையாது. 'கத்தம் என்ற சடங்கு இப்பாகுபாட்டை உருவாக்கின்றது.** செல்வந்தர் ஒருவர் மரணித்தால், அவருடைய கத்தத்தில் அதிகமான உலமாக்கள் அழைக்கப்பட்டு, பல குர்ஆன்கள் தமாம் செய்யப்பட்டு பெரும் விருந்துகள் வழங்கப்படுகின்றன. இதில் உலமாக்களுக்கு 'கொழுத்த ஹதிய்யாக்களும் கொடுக்கப்படுகின்றன. ஆனால், ஏழைகளோ தங்களின் உறவினர்களுக்கு இவ்வாறு செய்ய முடியவில்லையே என ஏங்கித் தவிக்கின்றார்கள். சில வறியவர்கள் கடனுக்கும், ஏன் வட்டிக்குக்கூட பணம் எடுத்து கத்தச் சடங்கை செய்கிறார்கள். இதிலிருந்து, கத்தம் என்ற ஒரு பித்அத், வட்டி எனும் பெரும் பாவம் ஒன்றைச் செய்ய வழிவகுத்துள்ளது என்பது தெளிவாகிறது. பாதிரிக்கு பணம் கொடுத்து பாவ மன்னிப்புப் பெறலாம் என்ற கிறிஸ்தவ நம்பிக்கை போன்று உலமாக்களுக்குப் ஹதிய்யா கொடுத்து மரணித்தவர்களுக்கு இறைவனின் றஹ்மத்தை வாங்கிவிடலாம் என்ற மூட நம்பிக்கையையும், கத்தம் சமூகத்தில் வளர்க்கின்றது.

ஆ) **உலமாக்கள் சமூகத்தில் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் கத்தம் என்ற சடங்கு மூலம் அவர்கள் தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.** சில பள்ளி நிருவாகங்கள் பேஷ் இமாமாக கடமையாற்றுபவர்களுக்கு போதிய சம்பளத்தை வழங்காமல், மிகுதியை கத்தம், மௌலித் ஓதுவதன் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறுகின்றனர். இது உலமாக்களை அவமதிக்கும் செயலாகும். எனவே இஸ்லாத்தில் இல்லாத கத்தம் மௌலித் நிறுத்தப்பட்டு பேஷ் இமாம்களுக்கு போதிய சம்பளம் வழங்கப்பட வேண்டும். இதற்குரிய செலவினங்களை (மஹல்லாரீதியாக அறவிடுவது கடிமான விடயமல்ல)

இ) மத்ரஸாக்கள் உருவாக்கப்பட்டது இஸ்லாமிய அறிஞர்களைத் தோற்றுவிப்பதற்க்காகவே. ஆனால் சில மத்ரஸா அதிபர்கள் கத்தம், பாத்திஹா மௌலித் ஓதுவதற்காகத்தான் உருவாக்கப்பட்டன, என நினைத்துக் கொண்டு, மாணவர்களை உலகக் கல்வி கற்பதற்கு தடை விதிக்கிறார்கள். பரீட்சையில் தோற்றும் மாணவர்களைத் தண்டிக்கின்றார்கள். இதனால் உலமாக்கள், நவீன காலத்து சவால்களை முன்னோக்குவதில் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். அரசாங்கப் பதவிகள், உள்நாட்டு வெளிநாட்டு பல்கலைக் கழக அனுமதி, வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு பெறுவது பெரும்பாலான உலமாக்களுக்கு முடியாமல் உள்ளது. எனவே இஸ்லாமிய சமூகம், கத்தம், மௌலித் சடங்குகளை ரத்துச் செய்து எதிர்காலத்து உலமா சமூகம் கௌரவமாக வாழ வழிவகைகள் செய்ய வேண்டும்.

இப்பிற்போக்குவாதிகள், **வெளிவேஷம், முதலைக் கண்ணீர் துஆ, இயக்கத்திற்கு ஆட்ச்சேர்ப்பு** ஆகியவைகள் மூலம் கொழுத்த வருமானங்களை பெறுவதால் ஏனைய உலமாக்களின் பரிதாபநிலையைப் பொருட்படுத்துவதில்லை.

12. நாம், பின்வரும் வணக்கங்களை மரணித்தவர்களுக்காகச் செய்யலாம்:

அ) அவர்களுக்கு 'துஆ, (பிரார்த்தித்தனை) இஸ்தி.்.பார் (பாவமன்னிப்பு) செய்தல்.

وَاسْتَغْفِرْ لِذَنبِكَ وَلِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ وَاللَّهُ يَعْلَمُ مُتَقَلَّبَكُمْ وَمَثْوَاكُمْ (سورة محمد:١٩)

- **'இன்னும் உம்முடைய பாவத்திற்காகவும், மு:ஃமின்களாகன ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் பாவ மன்னிப்புத் தேடுவீராக - அன்றியும் உங்களுடைய நடமாட்டத்தலத்தையும் உங்கள் தங்குமிடங்களையும் அல்லாஹ் நன்கறிகிறான்.'** (முஹம்மத்:19)

وَالَّذِينَ جَاؤُوا مِن بَعْدِهِمْ يَقُولُونَ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِينَ سَبَقُونَا بِالْإِيمَانِ وَلَا تَجْعَلْ فِي قُلُوبِنَا غِلًّا لِّلَّذِينَ آمَنُوا رَبَّنَا إِنَّكَ رَؤُوفٌ رَّحِيمٌ (الحشر ١٠)

- **'(முஹாஜிரீன்கள், அன்ஸார்கள் ஆகியோர்களுக்குப்) பின்பு வந்தவர்கள் "எங்கள் இறைவனே! எங்களுக்கும், ஈமான் கொள்வதில் எங்களை முந்திய எங்கள் சகோதரர்களுக்கும் மன்னிப்பு அருள்வாயாக, ஈமான் கொண்டவர்களக்கு எதிராக எங்களுடைய இதயங்களில் காழ்ப்புணர்தவை ஏற்படுத்தாதிருப்பாயாக! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன், கிருபை மிக்கவன்" என்றும் (பிரார்த்தித்துக்) கூறுவர்.** " (அல்-ஹஷ்ர்:10)

روى مسلم (٢١٢٦) عَنْ أُمِّ سَلَمَةَ قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ إِذَا حَضَرْتُمُ الْمَرِيضَ أَوِ الْمَيِّتَ فَقُولُوا خَيْرًا فَإِنَّ الْمَلَائِكَةَ يُؤَمِّنُونَ عَلَى مَا تَقُولُونَ , قَالَتْ: فَلَمَّا مَاتَ أَبُو سَلَمَةَ أَتَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ إِنَّ أَبَا سَلَمَةَ قَدْ مَاتَ قَالَ: قُولِي: اللَّهُمَّ اغْفِرْ لِي وَلَهُ وَأَعْقِبْنِي مِنْهُ عُقْبَى حَسَنَةً الحديث

- "நீங்கள் நோயாளி, அல்லது மரணித்தவரை தரிசிக்கச் சென்றால் நல்லதையே பேசுங்கள்! ஏனெனில், மலக்குமார்கள் நீங்கள் பேசுபவற்றுக்கு ஆமீன் சொல்கிறார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உம்மு ஸலமா (றழி) அவர்கள் கூறுகிறார்கள். மேலும், அபூ ஸலமா அவர்கள் மரணித்த போது நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! அபூ ஸலமா அவர்கள் மரணித்துவிட்டார்கள் எனக் கூறினேன், அதற்கு நபியவர்கள்: எனக்கும் அவருக்கும் பாவமன்னிப்புத் தந்தருள்வாயாக! அவருக்குப் பின்னால் அழகான ஒரு பகரத்தைத் தந்தருள்வாயாக! என கூறுமாறு (கற்றுத் தந்தார்கள்) (முஸ்லிம்: 2126)

ஆ) மரணித்தவர்களுக்காக ஸதக்கா செய்தல்.

عَنْ عَائِشَةَ رَضِي اللَّه عَنْهَا أَنَّ رَجُلًا قَالَ لِلنَّبِيِّ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ أُمِّي افْتُلِتَتْ نَفْسُهَا وَأُرَاهَا لَوْ تَكَلَّمَتْ تَصَدَّقَتْ أَفَأَتَصَدَّقُ عَنْهَا قَالَ: نَعَمْ تَصَدَّقْ عَنْهَا (البخاري:٢٧٦٠، مسلم:٢٣٢٣)

- 'ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து எனது தாயார் திடீரென மரணத்திவிட்டார், அவர் அப்போது பேச முடிந்திருந்தால் தர்மம் செய்வதற்கு (வஸிய்யத் செய்)திருப்பார், அவருக்காக நான் தர்மம் செய்யட்டுமா? என வினவ, ஆம் என நபியவர்கள் பதிலளித்தார்கள்" ஆதாரம்: (புஹாரி:2760, (முஸ்லிம்:2323)

இ) மரணித்தவர்களின் கடனை அடைத்தல்.

عَنْ سَلَمَةَ بْنِ الْأَكْوَعِ رَضِي اللَّهم عَنْهم أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ أُتِيَ بِجَنَازَةٍ لِيُصَلِّيَ عَلَيْهَا فَقَالَ: هَلْ عَلَيْهِ مِنْ دَيْنٍ قَالُوا: لا فَصَلَّى عَلَيْهِ ثُمَّ أُتِيَ بِجَنَازَةٍ أُخْرَى فَقَالَ هَلْ عَلَيْهِ مِنْ دَيْنٍ قَالُوا نَعَمْ قَالَ صَلُّوا عَلَى صَاحِبِكُمْ قَالَ أَبُو قَتَادَةَ عَلَيَّ دَيْنُهُ يَا رَسُولَ اللَّهِ فَصَلَّى عَلَيْهِ

- "நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்துவதற்காக ஒரு ஜனாஸா கொண்டுவரப்பட்டது. இவர் கடனாளியா? என நபியவர்கள் வினவ, இல்லை என்றனர். நபியவர்கள் தொழுகை நடத்தினார்கள். பின்பு மற்றொரு ஜனாஸா கொண்டு வரப்பட்டது. இவர் கடனாளியா என வினவ, ஆம் என நபித் தோழர்கள் பதிலளிக்க, அப்படியாயின் உங்கள் தோழருக்கு நீங்கள் தொழுகை நடத்துங்கள் எனக் கூறினார்கள். (அப்போது) அபூ கதாதா (றழி) அவர்கள்: "அல்லாஹ்வின் தூதரே! அவருடைய கடனை நான் பொறுப்பேற்கின்றேன்" எனக் கூற நபியவர்கள் அவருக்காக தொழுதார்கள். (புஹாரி: 2295)

ஈ) அவர்களின் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றல்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِي اللَّهم عَنْهما أَنَّ امْرَأَةً مِنْ جُهَيْنَةَ جَاءَتْ إِلَى النَّبِيِّ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَتْ إِنَّ أُمِّي نَذَرَتْ أَنْ تَحُجَّ فَلَمْ تَحُجَّ حَتَّى مَاتَتْ أَفَأَحُجُّ عَنْهَا قَالَ نَعَمْ حُجِّي عَنْهَا أَرَأَيْتِ لَوْ كَانَ عَلَى أُمِّكِ دَيْنٌ أَكُنْتِ قَاضِيَةً اقْضُوا اللَّهَ فَاللَّهُ أَحَقُّ بِالْوَفَاءِ

- “ஜுஹைனா என்ற கோத்திரத்தைச் சேர்ந்த பெண்மனி ஒருவர், நபியவர்களிடம் வந்து எனது தாய் ஹஜ் செய்வதாக நேர்ச்சை செய்திருந்தார்கள், (எனினும்) அவர்கள் மரணிக்கும் வரையில் ஹஜ் செய்யவில்லை. அவர்களுக்காக நான் ஹஜ் செய்யவா? எனக் கேட்டார். ஆம், அவருக்காக நீங்கள் ஹஜ் செய்யுங்கள் என நபியவர்கள் கூறிவிட்டு, உங்கள் தாயார் கடனாளியாக இருந்தால் நீங்கள் அவரின் கடனை நிறைவேற்றுவீர்கள்தானே, அதே போல், அல்லாஹ்வுடைய (கடனையும்) நிறைவேற்றுங்கள், அவனின் (கடனே) நிறைவேற்றுவதற்கு மிகவும் தகுந்தது” என நபியவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புஹாரி: 1852)

**உ) மரணித்தவர்களின் கடமையான நோன்பைப் பிடித்தல்**

**عَنْ عَائِشَةَ رَضِي اللَّهم عَنْهَا أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَنْ مَاتَ وَعَلَيْهِ صِيَامٌ صَامَ عَنْهُ وَلِيُّهُ (البخاري:١٩٥٢. مسلم:٢٦٨٧)**

- “எவர் கடமையான நோன்பை விட்டுவிட்டு மரணித்துவிட்டால் அவருக்காக அவருடைய உறவினர் நோன்பை நோற்றுக் கொள்ளட்டும்” என நபியவர்கள் கூறியதாக ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புஹாரி:1952 முஸ்லிம்:2687)

## *மரணத்தருவாயில் (ஸகராதுல் மவ்த்) இருப்பவர் மீது யாஸீன் ஓதலாமா?*

மரணத்தருவாயில் இருக்கும் ஒருவருக்கு ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ என்ற தவ்ஹீத் கலிமாவை சொல்லிக் கொடுக்குமாறு நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.

**روى مسلم (٢١٢٠) عن أبي سَعِيدٍ الْخُدْرِيَّ قال: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ: لَقِّنُوا مَوْتَاكُمْ لا إِلَهَ إِلَّا اللَّهُ**

‘இறக்கும் தருவாயில் இருக்கும் உங்களில் ஒருவருக்கு ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ என்ற கலிமாவைச் சொல்லிக் கொடுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல்-குத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம்2120)

ஆனால், சிலர், இந்த நபி வழியை மட்டும் செய்யாமல் சில பித்அத்களையும் சேர்த்துக் கொண்டார்கள். அவர்கள் மரணத்தருவாயில் இருப்பவருக்காக யாஸீன் சூறத்தை ஓதுகிறார்கள். அல்லது ஓதத் தெரிந்தவர்களை கூலிக்கு அமர்த்தி ஓத ஏற்பாடு செய்கிறார்கள். இதற்கு ஆதாரமாக ‘மரணித்தவர்கள் மீது யாஸீன் ஓதுங்கள்’ என்ற ஹதீஸில் காணப்படும் ‘மரணித்தவர்கள்’ என்ற சொல்லுக்கு மரணத் தருவாயில் இருப்பவர்கள்’ என வியாக்கியானம் வழங்குகிறார்கள். இந்த ஹதீஸுக்கு எவ்வாறு விளக்கம் கொடுத்தாலும், அந்த ஹதீஸ் பலயீனமானது என்பதை இப்பிரசுரத்தின் (4) ம் இலக்கத்தின் கீழ் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதேபோன்று மரணத்தருவாயில் இருப்பவர் மீது யாஸீன் ஓதினால் அவரது மரணவேதனை குறைக்கப்படுகிறது என்று கூறும் பின்வரும் ஹதீஸும் மிகவும் பலயீனமானதாகும்.

அதே போன்று மரணத்தருவாயில் இருப்பவருக்காக யாஸீன் ஓதினால் மரண வேதனை இலவாக்கப்படுகின்றது என்று கூறும் ஹதீஸும் பலயீனமானதாகும். இந்த ஹதீஸ் பின்வருமாறு:

**روى الديلمي في مسند الفردوس (٦٠٩٩) من طريق مروان بن سالم عن صفوان بن عمرو عن شريح عن أبي الدرداء وأبي ذر رضي الله عنهما قالا: قال رسول الله صلى الله عليه وسلم: ما من مبت يموت فيقرأ عنده يس إلاّ هوّن عليه، وفيه علتان: (١) أن شريحا وهو ابن عبيد لم يسمع من أحد من الصحابة فالإسناد منقطع (٢) أن في سنده مروان بن سالم الغفاري وهو ضعيف جدا (تهذيب الكمال للمزي ١٢/٤٤٧، ٢٧/٣٩٢-٣٩٤)**

இந்த ஹதீஸில் இரண்டு வடுகள் உள்ளன. இவ்வறிப்பாளர் தொடரில் காணப்படும் ‘‘ஷுறைஹ்’ எனபவர் ஸஹாபாக்களிடம் ஹதீஸைப் பெறவில்லை. மற்றையது ‘மர்வான் பின் ஸாலிம்’ பொய் ஹதீஸ்களை இட்டுக் கட்டுபவர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

மேலும், மரணித்தவர்களுக்காக ஏழு நாள் அன்னதானம் வழங்குவதை மக்கள் விரும்பினார்கள் என தாவூஸ் (ரஹ்) அவர்கள் கூறிய கூற்றும் ஊர்ஜிதமற்றதாகும்.

**روى الإمام أحمد في الزهد من طريق هاشم بن القاسم عن الأشجعي عن سفيان قال: قال طاووس: "إن الموتى يفتنون في قبورهم سبعة أيام فكانوا يستحبون أن يطعم عنهم تلك الأيام" قلت: لا يحتج بقول التابعي في الأمور الغيبية، وقول التابعي "كانوا يفعلون كذا" يحتمل الصحابة وغيرهم أما دعوى ابن حجر الهيتمي / أنه يقصد بذلك الصحابة فهي تخمين ليس عليه دليل.**

**அல்லாஹ்தஆலா நம்மனைவரையும் குர்ஆன் ஹதீஸ் ஸஹாபாக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றில் வாழ அருள் புரிவானாக.**